செய்தி வெளியீடு எண் : 1536 நாள் : 05.09.2022

# செய்தி வெளியீடு

## தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்
## 51 சங்கங்களின் 64 தற்செயல் காலியிடங்களுக்கான தேர்தல் அறிவிப்பு
**(1988–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் விதிகள், விதி எண் 52 மற்றும் 53–ன் கீழ்)**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வகை கூட்டுறவுச் சங்கங்களுக்குமான தேர்தல்களை நடத்த தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது அச்சங்கங்களில் ஏற்பட்டுள்ள தலைவர் / துணைத்தலைவர் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் காலியிடங்களுக்கான தேர்தல் திட்டத்தை ஆணையம் அறிவித்துள்ளது.

### தலைவர் மற்றும் துணைத்தலைவர் காலி இடங்களுக்கான தேர்தல்

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டின் கீழ் வரும் விருதுநகர் மாவட்டம் சத்திரப்புளியங்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு மாண்பமை (Hon'ble) சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை தீர்ப்பாணையின்படி தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தலுக்கு திட்டம் அறிவிக்கப்படுகிறது. அதன்படி அச்சங்கத்திற்கான தலைவர் / துணைத்தலைவர் தேர்தல் 12.09.2022 அன்று நடைபெறும்.

கைத்தறி (ம) துணிநூல் துறை, தொழில் வணிகத்துறை, சமூக நலத்துறை, மீன்வளத்துறை, பட்டுவளர்ச்சித்துறை ஆகிய 5 துறைகளின் கீழ் வரும் 38 கூட்டுறவுச் சங்கங்களில் 30 தலைவர் மற்றும் 9 துணைத்தலைவர் பதவி காலியிடங்களுக்கான தேர்தல் 12.09.2022 அன்று நடைபெறும். மேலும் கைத்தறி (ம) துணிநூல் துறை, மீன்வளம் (ம) மீனவர் நலத்துறை ஆகிய துறைகளின் கீழ் வரும் 4 சங்கங்களில் 3 தலைவர் மற்றும் 3 துணைத்தலைவர் காலி இடங்களுக்கான தேர்தல் 07.10.2022 அன்று நடைபெறும்.

### நிர்வாகக்குழு உறுப்பினர்கள் காலி இடங்களுக்கான தேர்தல்

கைத்தறி (ம) துணிநூல் துறை, தொழில் வணிகத்துறை, சமூக நலத்துறை, மீன்வளத்துறை, பட்டுவளர்ச்சித்துறை ஆகிய 5 துறைகளின் கீழ் வரும் 12 கூட்டுறவுச் சங்கங்களில் 17 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் காலி இடங்களுக்கான தேர்தல் திட்டத்தினை ஆணையம் வழங்கியுள்ளது. அவற்றில் 5 இடங்கள் பெண்களுக்கும், 3 இடங்கள் ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. இச்சங்கங்கள் தொடர்பான மாவட்ட தேர்தல் அலுவலர்கள் தேர்தல் அறிவிப்பினை வெளியிடுவர்.

### வேட்பு மனுத் தாக்கல்

இதற்கான வேட்பு மனுதாக்கல் 22.09.2022 அன்றும், பரிசீலனை 23.09.2022 அன்றும், திரும்பப் பெறுதல் மற்றும் இறுதி வேட்பாளர் பட்டியல் 24.09.2022 அன்று வெளியிடவும், போட்டியிருப்பின் 29.09.2022 அன்று வாக்குப்பதிவும், வாக்கு எண்ணுகை மற்றும் முடிவு அறிவித்தல் 30.09.2022 அன்றும் நடைபெற உள்ளன.

திரு . தயானந்த் கட்டாரியா இ.ஆ.ப.,
தேர்தல் ஆணையர்.

**<u>தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்</u>**

**<u>51 சங்கங்களின் 64 தற்செயல் காலியிடங்களின் விபரம்</u>**

| வ. எண் | துறை | சங்கங்கள் | காலியிடங்கள் | | |
|---|---|---|---|---|---|
| | | | நிர்வாகக்குழு உறுப்பினர் | தலைவர் | துணைத் தலைவர் |
| 1 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (மாண்பமை (Hon'ble) சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை தீர்ப்பாணையின்படி) | 1 | 0 | 1 | 1 |
| 2 | கைத்தறி (ம) துணிநூல் துறை | 27 | 1 | 20 | 8 |
| 3 | மீன்வளம் (ம) மீனவர் நலத்துறை | 5 | 4 | 4 | 2 |
| 4 | தொழில் (ம) தொழில் வணிகத்துறை | 12 | 10 | 5 | 2 |
| 5 | சமூக நலன் (ம) மகளிர் உரிமைத்துறை | 5 | 2 | 3 | 0 |
| 6 | பட்டுவளர்ச்சி துறை | 1 | 0 | 1 | 0 |
| | **மொத்தம்** | **51** | **17** | **34** | **13** |

**(ஆணையரின் ஆணைப்படி)**

**செயலாளர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in